# சுபீட்சம்

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே — சுபீட்சம் — SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 20.04.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







## மட்டக்களப்பு மாநகரசபை வளாகத்தில்
# ஏட்டிக்கு போட்டியாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்







(மட்டுநிருபர்)

ஜி.கே. அறக்கட்டளையின் இலவச அமரர் ஊர்தி சேவை வாகனத்தை மட்டக்களப்பு மாநகரசபை வளாகத்திலேயே தரிப்பதற்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பு சமூகப் பற்றாளர்களினால் மட்டக்களப்பு மாநகரசபை

02 ஆம் பக்கத்தில்...

## அனைத்து பல்கலைக்கழகங்களும் 27 இல் திறப்பு

(ஊர்காவலன்)

நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் எதிர்வரும் ஏப்ரல் 27 ஆம் திகதி முதல் மீள திறக்க தீர்மானித்துள்ளதாக

02 ஆம் பக்கத்தில்...

## அன்னை பூபதியின் 33 ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு
### தடையுத்தரவுடன் வந்த பொலிஸார்





(செங்கலடி நிருபர்)

இந்திய இராணுவத்தினர் இலங்கையில் இருந்து வெளியேறக்கோரி மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றலில் உண்ணாவிரத போராட்டம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் அன்னை பூபதியின் 33ஆவது நினைவு தினம் நேற்று மட்டக்களப்பு நாவலடியில் இடம்பெற்றது.

காலை 06 மணியளவில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் ஏற்பாட்டில் இந் நினைவேந்தல்

02 ஆம் பக்கத்தில்...

## அமைதிக்காக போராடியவர்களை அஞ்சலிக்க முடியாதவர்களாக தமிழர்கள்
### சிறீதரன் ஆதங்கம்

(கீதன்)



அமைதிக்காகவும் மனிதாபிமானத்திற்காகவும் போராடியவர்களையே அஞ்சலிக்க முடியாதவர்களாக தமிழர்கள் இருக்கிறார்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## ஒரு வாரம் மாத்திரமே விடுமுறை

(ஊர்காவலன்)

2021 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கான இரண்டாம் தவணை விடுமுறை ஒரு வாரத்திற்கு மட்டுப்படுத்தப்படும்

02 ஆம் பக்கத்தில்...

## சாகாமம் கிராமத்தில் வீசிய மினி சூறாவளி; வீடுகள் சேதம்



(திருக்கோவில் நிருபர்)

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாகாமம் கிராம சேவையாளர் பிரிவில் வீசிய மினி சூறாவளி காரணமாக மூன்று வீடுகள் மற்றும் ஆட்டு கொட்டகைகள் என்பன சேதமடைந்துள்ளன.

02 ஆம் பக்கத்தில்...











## கத்தோலிக்க பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை

(காந்தன்)

இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் 2 வது ஆண்டு நிறைவு அனைத்து தேவாலயங்களிலும் சிறப்பு திருப்பலியுடன் அனுஸ்டிக்கப்பட உள்ளது.

இதையொட்டி அனைத்து கத்தோலிக்க பாடசாலைகளுக்கும் ஏப்ரல் 21 புதன்கிழமை விடுமுறை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு

02 ஆம் பக்கத்தில்...






## எமக்கு கட்டளையிட முடியாது; அருட்தந்தை ஜெயபாலன்

(காந்தன்)

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் எமக்கு கட்டளையிட முடியாது என மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

இணையத்தளமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...











## ஏப்ரல் 21 க்கு முன்னர் முடியாது

(காந்தன்)

ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு குற்றம்

02 ஆம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
மாணிக்கப்போடி அறக்கட்டளை
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

## ஏப்ரல் 21 க்கு முன்னர் முடியாது

சாட்டியவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பது கடினம் என நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை உருவாக்குவது அரசாங்கத்தின் கடமை அல்லது பொறுப்பு அல்ல என குறிப்பிட்ட அவர் சட்டமா அதிபரே அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என கூறினார்.

அதன்படி பொலிஸார், புலனாய்வு பிரிவினர் மற்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் பெறப்பட்ட விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார்.

இருப்பினும், அரசியல் ரீதியாக விடுக்கும் அழுத்தங்களுக்காக சட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் விரும்பவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு உதவ சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த 10 மூத்த ஆலோசகர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார்.

## கட்சி தலைவர் கூட்டத்தை புறக்கணித்த விமல்,கம்மன்பில வாசுதேவ

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் நடைபெற்ற கூட்டத்தை அமைச்சர்களான விமல் வீரசன்ச, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் புறக்கணித்துள்ளனர்.

குறித்த கூட்டத்திற்கு கட்சித் தலைவர்களுக்கு மேலதிகமாக, அதிகமானோர் அழைக்கப்பட்டுள்ளமையால் தாம் கூட்டத்தை புறக்கணிப்பதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டம் இன்று(திங்கட்கிழமை) பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு 20 பேரளவில் கலந்துகொள்ள வேண்டிய நிலையில், 51 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர்களான விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆளும் கட்சியுடன் 14 பங்காளிக் கட்சிகளே ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் தவிர்ந்தவர்கள் கலந்துகொண்டுள்ள கூட்டத்தில் தமது கட்சியின் பிரச்சினைகளை கலந்துரையாட முடியாதென்று கூறி, மேற்படி அமைச்சர்கள் கூட்டத்தை புறக்கணித்துள்ளனர்.

## ஒரு வாரம் மாத்திரமே விடுமுறை

என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாடத்திட்டத்தை உள்ளடக்கும் வகையில் விடுமுறைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அன்னை பூபதியின் 33 ஆவது நினைவு தினம்

அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்தின், ஞா.ஸ்ரீநேசன், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், மாநகரசபை உறுப்பினர்கள் ஏறாவூர் பற்று தவிசாளர் எஸ்.சர்வானந்தன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் என்.நடராசா ஆகியோரால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலியுடன் தொடர்ந்து 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

1988.03.19 ஆம் திகதியிருந்து 1988.04.19 வரையில் உண்ணா விரதமிருந்து அன்னை பூபதி உயிர்நீர்த்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன் மற்றும் ஞா.ஸ்ரீநேசன் ஆகியோர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர். குறிப்பாக நேற்று காலை 06.15 மணியளவில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

அஞ்சலி செலுத்தி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்து அவ்விடத்தில் இருந்து செல்லும் போது நீதிமன்ற உத்தரவுடன் காத்தான்குடி பொலிசார். வருகை தந்திருந்தனர்.

எனினும் பொலிசார் வருவதற்கு முன்னர் சுடர் ஏற்றப்பட்டது.

## அனைத்து பல்கலைக்கழகங்கழும் 27 இல்

கல்வியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தொற்றின் அச்சுறுத்தல் தொடர்ந்து நிலவுகின்றமையினால், சுகாதார நடைமுறைகளை பின்பற்றி, பல்கலைக்கழகங்களை திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனாலும் விடுதிகளை ஆரம்பிக்கும் விடயத்தில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. ஆகையினால் 3ஆம், 4ஆம் வருட மாணவர்களை மட்டும் விடுதிக்குள் உள்வாங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதனையடுத்து முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகளை ஆரம்பிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் இரண்டாம் தவணைக்காக ஓகஸ்ட் மாதத்தில் வழங்கப்படும் பாடசாலைகளுக்கான விடுமுறையை ஒரு வார காலமாக குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.





Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


## எமக்கு கட்டளையிட முடியாது;

இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தின குண்டுத்தாக்குதலின் இரண்டாம் வருட நினைவு தினம் நாளை அனுஸ்டிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் அன்றையதினம் இரண்டு நிமிட மௌன அஞ்சலியினை செலுத்த வேண்டும் எனவும் விசேட வழிபாடுகளை முன்னெடுக்குமாறும் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இலங்கை முழுவதும் உள்ள ஆயர்கள் மற்றும் அருட்தந்தையர்களுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளார்.

எனினும், பேராயர் மல்கம் ரஞ்சித் கொழும்பு மறைமாவட்டத்திற்குதான் ஆயர்.எனவே எங்களுக்கு எவ்வித அறிவுறுத்தல்களை வழங்குவதென்றாலும் அதனை எமது மறைமாவட்ட ஆயரே வழங்க முடியும் என அருட்தந்தை ஜெயபாலன் குறிப்பிட்டுள்ளார்.

## கத்தோலிக்க பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை

பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் இறந்தவர்களை நினைவுகூரும் வகையில் ஏப்ரல் 21 ஆம் திகதி காலை 8.45 மணிமுதல் அடுத்த 02 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு அவர் அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். இதற்கிடையே ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை நினைவுகூரும் வகையில் நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ள சிறப்பு திருப்பலிகளின் போது, தேவாலயங்களுக்கு அதிகபட்ச பாதுகாப்பு வழங்கப்பட உள்ளது. தேவாலயங்களுக்கு சிறப்பு பாதுகாப்பு வழங்குவது குறித்து ஏற்கனவே சம்பந்தப்பட்ட பொலிஸ் பிரிவுகளுக்கு பொலிஸ் தலைமையகத்தினால் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

## சாகாமம் கிராமத்தில் வீசிய மினி சூறாவளி; வீடுகள் சேதம்

திருக்கோவில் பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் திடீர் என காற்று வீதசத் தொடங்கியதுடன் அது மினி சூறாவளியான சாகாமம் கிராமத்தில் வீசியதுடன் மக்களின் வீடுகள் மற்றும் ஆட்டுக் கொட்டகைகள் போன்றன சேதமடைந்து இருந்தன.

இதன்போது வீட்டின் மேல் கூரைகள் காற்றில் அள்ளுண்டு வீசப்பட்டு மரங்களில் தொங்கிக் கொண்டு இருப்பதையும் அவதாணிக்கக் கூடியதாக இருந்தன.

இதனைத் தொடர்ந்து கிராம மக்களால் கிராம சேவையாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தியதைத் அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற உத்தியோகத்தர்கள் நிலைமைகளைப் பார்வையிட்டு பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் மற்றும் அனர்த்த முகாமைத்து உத்தியோகத்தர் ஆகியோருக்கு உடனடியாக சேத விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளதுடன் இவ் அனர்த்தப் பாதிப்பு குறித்து பிரதேச செயலாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் பிரதேச செயலக அனர்தத் முகாமைத்துப் உத்தியோகத்தரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## அமைதிக்காக போராடியவர்களை அஞ்சலிக்க முடியாதவர்களாக

நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதி அவர்களின் 33 ஆவது ஆண்டு நினைவு நாளான இன்று அவருக்கு கிளிநொச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அஞ்சலி செலுத்திய பின்னர் ஆற்றிய உரையிலேயே இதனை தெரிவித்தார்.

அன்னையர் முன்னணியின் செயற்பாட்டாளராக விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் சண்டை நடந்து கொண்டிருந்த காலத்தில் இந்தியப் படைக்கு எதிராக குரல் கொடுக்க, அறப் போராட்டங்களை தமிழர்கள் நடாத்தினார்கள்.

அந்த அறப் போராட்டத்தினை ஆரம்பித்து வைத்தவர் திலீபன் அவர்கள் ஆவார் அவருக்கு பின்னர் அன்னை பூபதி உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டும். என்கிற இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து இந்திய அரசுக்கெதிராக உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தொடங்கினார் என அவர் இதன் போது சுட்டிக்காட்டினார். அன்னை பூபதியின் வரலாற்று தடங்கள் வித்தியாசமானது . உறுதியான பெண்மணியாக உலகத்தில் வாழ்கிற பெண்களுக்கெல்லாம் முன்மாதிரியாக அறவழியில் தன் மக்களுக்காக மண்ணுக்காக தன் உயிரைத் தியாகம் செய்த தியாகியாக அன்னை பூபதி மிளிர்கிறார்.

அவ்வாறான தாயின் நினைவு நாளைக் கூட நாம் கொண்டாட முடியாதவர்களாக நாம் நசுக்கப்பட்டு இருக்கிறோம் என்றார். அவர் ஒரு பயங்கரவாதி அல்ல அவர் ஆயுதம் ஏந்தவில்லை துப்பாக்கி ஏந்தி யாரையும் சுடவில்லை யாரையும் சுடவேண்டும் என்று கூட கேட்கவில்லை அவர் கேட்டதெல்லாமே அமைதியையும் மனிதாபிமானத்தினையும் மட்டுமே கோரிக்கையாக முன்வைத்திருந்தார் என சிறீதரன் எம்.பி குறிப்பிட்டார்.

அதற்காகவே 30 நாட்கள் ஆகாரமின்றி தன்னுயிரை ஈகம் செய்தவரைக்கூட நினைவுகூர முடியாதவர்களாக நாம் இருக்கிறோம். இன்றைய கால கட்டத்தில் நெருக்கடிகளுக்கும் வன்முறைகளுக்கும் தமிழர்களாக நாம் முகம் கொடுக்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு மாநகரசபை வளாகத்தில் ஏட்டிக்கு போட்டியாக

முன்றலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஏழை மக்களின் இறுதிக் கட்டத்தில் இலவச சேவையனை வழங்கி வருகின்ற இவ் அமரர் ஊர்தி சேவையில் தங்களது அதிகார மோதலை வெளிப்படுத்துவதை ஆணையாளர் உடன் நிறுத்த வேண்டும் எனவும், அரசியல் பின்புலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது தடுக்கப்பட்டு மக்களின் சேவைக்காக இயங்கும் இவ் அமரர் ஊர்தி சேவை வாகனத்தினை மாநகர வளாகத்திலேயே தரிப்பதற்கு எவ்வித இடையூறும் வழங்காது அனுமதியளித்து மக்களுக்கான சேவைகளைத் தொடருவதற்கு ஆவன செய்ய வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அமரர் ஊர்தியில் அரசியல் வேண்டாம், அதிகார மோதலில் மக்கள் சேவையைத் தடுக்காதே போன்ற கேசங்களை எழுப்பியவாறும், ஆணையாளரே ஊழியரை மிரட்டாதே, ஜி.கே அறக்கட்டளை மட்டக்களப்பிற்குத் தேவையான ஒரு சேவை, ஆணையாளரே ஏழை மக்களின் இலவச சேவையை முடக்காதே, ஆணையாளரே ஏழை மக்களின் கண்ணீருக்குப் பதில் சொல், ஆணையாளரே உமது ஆணவத்தை ஏழைமக்கள் மீது காட்டாதே, கிழக்கின் ஆளுநரே நீதியினை நிலைநாட்டு போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த விடயம் தொடர்பில் மாநகர முதல்வர் உட்பட உரியவர்கள் வருகை தந்து தங்களுக்குரிய உகந்த பதிலை வழங்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கையினை முன்வைத்தனர்.

இது எவ்வித அரசியல் பிரச்சினையும் இல்லை. இது மக்களின் பிரச்சினை, மக்களுக்கான இலவச சேவையை முடக்குவதற்கு எவருக்கும் அனுமதிக்க முடியாது, அரசிலைத் தாண்டி மக்கள் பற்றி சிந்தித்து அனைவரும் செயற்பட வேண்டும். இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் நன்மை பெற்ற இவ்அமரர் ஊர்தி சேவைக்கு தடையினை எற்படுத்தவதென்பது பாவப்பட்ட ஏழை மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் செயற்பாடாகும் என்று தெரிவித்தனர்.

இதன் போது அவ்விடம் மாநகர முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உட்பட உறுப்பினர்கள் சிலர் வருகை தந்து ஆர்ப்பாட்டக் காரர்களுடன் கலந்துரையாடினர். 2019ம் ஆண்டு ஜி.கே அறக்கட்டளையின் வேண்டுகோளுகிணங்க மாநகரசபை அமர்வில் தீர்மானம் கொண்டு வரப்பட்டு 38 உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இவ்அமரர் ஊர்தி மாநகர வளாகத்தில் தரிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. இரண்டரை வருடங்களுக்கு மேல் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் இயங்கி வந்த சேவை தற்போது புதிய ஆணையாளர் வருகை தந்ததன் பின்னர் இவ்வாகனம் வெளியில் போடப்பட்டது. பின்னர் இன்னுமொரு சபைத் தீர்மாதனத்தைக் கொண்டு வந்து வாகனம் மீண்டும் தரிப்பிடத்தில் கொண்டு செல்லப்பட்ட வேளை அவ்வானத்தைச் சேதப்படுத்தி, வாகனத்தைச் சூழ கற்களைக் குவித்து, ஜி.கே. அறக்கட்டளை இலவச அமரர் ஊர்தி என வாகனத்தில் பதிக்கப்பட்டிருந்த பெயரையும் வெள்ளைப் பூச்சினால் அழித்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. இறுதியில் உரியவர்களிடம் வாகன சாவி இருக்கையில் எவருக்கும் தெரியாமல் திருப்பெருந்துறைக்கு வாகனம் மாற்றப்பட்டுள்ளதாகவும் அறிகின்றோம். இது முற்று முழுதாக ஆணையாளரின் செயற்பாடுகள். சபையின் தீர்மானங்களை மீறிச் செயற்படுகிறார் என்று கூறி ஆணையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்றத் தடையுத்தரவு பெற்றிருந்தும் நீதிமன்றத்தினையும் அவமதிக்கும் முகமாக மேலும் மேலும் ஆணையாளர் செயற்பட்டு வருகின்றார் என பிரதி முதல்வர் இதன் போது சுட்டிக் காட்டினார்.

இதேவேளை மாநகர ஆணையளரின் தலைமையில் ஊழியர்களை ஒன்று திரட்டி மாநகர வாயிலில் இவ்வார்ப்பாட்டத்திற்கு எதிராகவும், ஜி.கேஅறக்கட்டளையின் அமரர் ஊர்தி சேடிவையினை மாநகர வளாகத்திற்குள் இடுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும் கவனயிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது அவ்விடம் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களிடம் ஊடகவியலாளர்கள் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றார்கள் என ஆணையாளர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார். இதனால் ஊடகவியலாளர்கள் மற்றும் ஆணையாளருக்கிடையில் கருத்து மோதல்கள் இடம்பெற்றன. இவ்வாறு ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்காமல் ஒரு விடயத்தை ஏற்பாடு செய்து விட்டு ஊடகவியலாளர்கள் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றார்கள் என்று சொல்வது பொருத்தமற்ற விடயம் என ஊடகவியலாளர்களினால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

பின்னர் அமரர் ஊர்தியினை மாநகர எல்லைக்குள் இடுவதற்கு மாநகர ஊழியர்களுக்கு விருப்பமில்லாத நிலை காணப்படுவதாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு ஒரு தனிநபரின் அரசியல் செயற்பாடுகளுக்காக இவ்ஊர்தி சேவை செயற்படுவதாகவும், அவருக்கு மாவட்டத்தில் பல இடங்களில் காணிகள் உள்ளதாகவும், அவற்றில் இவ்வாகனத்தைத் தரித்து தங்கள் சேவையைச் செய்ய முடியும் என்றும் மாநகர ஆணையாளர் தெரிவித்தார். மாநகரசபை அனுமதியளிப்பதற்கு அதற்கு ஒரு வரைமுறை உள்ளது. எந்த அதிகார வரம்பிற்குள் மாநகரசபை இவ் ஊர்திக்கு அனுமதியளித்தது என்று தெரியாது. ஊழியர்களின் அச்சமும் நியாயமானது. எனவேதான் இதனை திருப்பெருந்துமுறைக்கு மாற்றினோம். அங்கிருந்தும் இச்சேவையைத் தொடர முடியும் எனறும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது ஊர்தி சேவைக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள். ஊழியர்கள் கடமை நேரத்தில் இவ்வாறு கவனயிர்ப்பில் எவ்வித நடைமுறைகளின் ஊடாக ஈடுபடுகின்றார்கள், ஆணையாளர் தனது அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்கின்றாரா? என்ற கேள்விகளையும் முன்வைத்திருந்தனர். அதன் அடிபப்படையில் மாநகர முதல்வர் ஊழியர்களிடம் கடமை நேரத்தில் இவ்வாறு செயற்படுவது உகந்ததல்ல என்று தெரிவிக்கையில் மாநகர உத்தியோகத்தர்கள் பலர் கலைந்து சென்றனர்.

இதன் பிற்பாடு ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்கும் முயற்சியில் மாநகர ஊழியர்கள் சிலர் முற்பட்டனர். இதன் போது பிரதான வாயிற் கதவு ஊழியர்களால் மூடப்பட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியேற்றும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. பொலிஸாரின் தலையீட்டிற்கமைவாக நுழைவாயில் மீளத்திறக்கப்பட்டு ஆர்ப்பாட்டக்காரர்களை அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தினை மேற்கொள்ளுமாறும். மாநகரசபைக்குள் நுழையாமல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுமாறும் தெரிவித்தமைக்கமைவாக வீதியில் இருந்து அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி



SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaran-ayurveda.ch
Krankenkasse Anerkannt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவடிப்பள்ளி பகுதியில் முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

(பாறுக் ஷிஹான்)



அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ள நிலையில் அதிகளவிலான முதலைகள் வெளியேறி மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்கின்றன.

தற்போது மாவடிப்பள்ளி பாலத்தை அண்மித்த ஆற்றை விட்டு இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதனால் வீதியால் செல்லும் பயணிகள் மற்றும் பாதசாரிகள் அச்சத்துடனேயே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் அதிகமான சுமார் 9,5, 4அடி நீளமுடைய முதலைகள் வெளியேறுவதாக மக்கள் தெரிவிக்கினறனர்.

மேலும் இம்மாவட்டத்தில் கிட்டங்கி, மாவடிப்பள்ளி, சின்ன முகத்துவாரம் உள்ளிட்ட களப்புக்கள் போன்ற இடங்களிலும் முதலை அச்சறுத்தல் தொடர்ந்து வருகின்றன.மேற்படி பகுதிகளில் உள்ள வாவிகள் குளங்களிலும் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

மேலும் தற்போது சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ளதனால் வயல் நிலங்கள் கால்வாய்கள் அண்டிய பகுதியில் நீருக்காக குளங்களை நாடிச் செல்லும் ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் முதலைகளினால் இரைக்குள்ளாகின்றது. இப்பகுதியில் இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதனால் கட்டாக்காலிகளாக இப்பகுதியில் திரியும் மாடுகளே இம்முதலைகளுக்கு இரையாகுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதிகளில் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறதுடன் முதலைகளின் பெருக்கம் சம்பந்தமாக உரிய இடங்களில் அறிவுறுத்துதல்கள் எச்சரிக்கை பலகைகள் உரிய இடங்களில் இதுவரையும் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. முதலை அபாயம் தெரியாமல் இப்பகுதியில் பயணிப்பதால் முதலையின் பிடிக்குள் அகப்படும் சாத்தியம் உள்ளது. இதை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

# மாங்கேணியில் இன நல்லுறவுடன் கொண்டாடப்பட்ட புத்தாண்டு விழா







(ந.குகதர்சன்)

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாங்கேணியில் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு தமிழ் பாரம்பரியங்களுடன் கிராமிய விளையாட்டும் கலை நிகழவும் சிறுவர்களின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டது.

நல்லாயர் கன்னியர் இல்ல அருட்சகோதரி நிர்மலா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வாகரை பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் அ.அழகுராஜ், பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ்.உமேஷ், மத போதகர் உட்பட டி.எப்.சி.சி வங்கி ஊழியர்கள், பிரதேச பொதுமக்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள், பெற்றோர் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது வைகறை, தீபம், கலசம் என பாரம்பரிய இல்லங்கள் அமைக்கப்பட்டு கலாசாரம், கலை, பாரம்பரியம், பண்பாடு என்பவற்றை எடுத்து காட்டும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டு காணப்பட்டது.

இன நல்லுறவை பேணும் வகையில் இந்து, கிறிஸ்தவ மக்களின் பங்குபற்றுதலுடன் கிராமிய விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றதுடன், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

# சிங்கள மொழியை கட்டாயமாக கற்றுக் கொள்ள வேண்டும்





(ந.குகதர்சன்)

அரச உத்தியோகத்தர்கள் தமிழ் தாய் மொழிக்கப்பால் சிங்கள மொழியை கட்டாயமாக கற்றுக் கொள்ள வேண்டும் என்று அரச மொழிகள் திணைக்களம் முன்னேற்பாடுகளை செய்து வருகின்ற ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வி.தவராஜா தெரிவித்தார்.

சிங்கள பாடநெறிகள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பல அலுவலகங்களிலும் திணைக்களங்களிலும் நடைபெற்று வரும் நிலையில் ஓட்டமாவடி பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான சிங்கள பாடநெறியின் ஆரம்ப நிகழ்வு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது கலந்து கொண்டு தலைமையுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மொழிக்கும் அப்பால் இரண்டு மொழிகள் இலங்கையில் அவசியமாக காணப்படுகிறது. எமது தாய் மொழிக்கு அப்பாலுள்ள இரண்டு மொழிகளிலும் நாம் ஒவ்வொருவரும் தேர்ச்சி பெற்றவர்களாக திகழ வேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்டு தான் அரச உத்தியோகத்தர்களுக்கு தமிழ் தாய் மொழிக்கப்பால் சிங்கள மொழியை கட்டாயமாக கற்றுக் கொள்ள வேண்டும் என்று அரச மொழிகள் திணைக்களம் எதிர்பார்த்து அதற்கான முன்னேற்பாடுகளை செய்து வருகின்றனர்.

இலங்கையில் அரச உத்தியோகத்தில் உள்ள ஒருவர் தமிழ் தாய்மொழிக்கு அப்பால் உள்ள இரண்டு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக திகழ்வார்களாக இருந்தால் அவர்களது கடமைகளைச் செய்வதில் மிகவும் இலகுவாக இருக்கும் நம்மை நாடி வரும் பொது மக்களுக்கு சேவை வழங்குவதற்கு நமது தாய் மொழியையும் விட தாய் மொழியுடன் சிங்கள மொழியில் தெரிந்திருந்தால் தேவைப்படின் அவர்களை திருப்திப்படுத்தும் வகையில் சேவைகளை செய்வதற்கு மொழி அவசியமாக காணப்படுகிறது.

அரச உத்தியோகத்தருக்கு தனது கடமையைச் செய்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும் வெளிநாட்டில் எந்த பகுதியிலும் கடமை செய்வதற்கும் மொழி தெரிந்திருப்பின் தன் கடமைகளை செய்வதற்கு அப்பகுதியில் செல்வதற்கு அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஆரம்ப பாடசாலை காலத்தில் இருந்து தமிழ் மொழியை கற்று தமிழ் மொழி பேசும் பிரதேசங்களில கடமை புரிவதால் சிங்கள மொழியை கற்பதில் ஆர்வம் குறைந்தவர்களாக காணப்படும்.

இனிவரும் காலங்களில் அவ்வாறு இருந்து விடாமல் எமது தாய் மொழியுடன் சேர்த்து சிங்கள மொழியும் ஆங்கில மொழியிலும் நாம் ஒவ்வொருவரும் தேர்ச்சி பெற்றவர்களாக திகழ வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் அரச அலுவலகர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் சிங்கள மற்றும் தமிழ் மொழிக் கற்கை நெறிகள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 18௦%2020 சுற்று நிருபத்திற்கு அமைவாக தமிழ் பேசும் அரச அலுவலகர்களுக்கு சிங்கள மொழி பாடநெறியும், சிங்கள மொழி பேசும் அரச அலுவலகர்களுக்கு தமிழ் மொழி பாடநெறியும் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சி நெறிக்கு வளவாளராக காவத்தமுனை அல் அமீன் வித்தியாலயத்தில் இரண்டாம் மொழி ஆசிரியரும், அரச கரும மொழிகள் திணைக்களத்தின் போதனாசிரியருமான எம்.எம்.செய்னுதீன் கலந்து கொண்டு பாடநெறிகளை கற்பித்தார்.

# கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் இலுப்பக்கடவை பொலிஸ் பிரிவில் ஒரு கோடி ரூபா பெறுமதியான கஞ்சாப் பொதிகளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவு பிறப்பித்தார்.

ஞாயிற்றுக்கிழமை மன்னார் இலுப்பக்கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பி ஆறு பகுதியில் டிப்பர் வாகனம் ஒன்றில் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான 89 கிலோ 355 கிராம் கஞ்சாவுடன் வவுனியா தவசிக்குளம் பகுதியைச் சார்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் மூவரையும் மன்னார் பொலிசார் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆஜர்படுத்தியபோது இவ் சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் 21.04.2021 புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் கட்டளை பிறப்பித்தார்.

இவ் சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் முன்னிலையாகியிருந்தார்.

# 31 வருட கல்விச் சேவையில் இருந்து ஓய்வு

துறையூர் சஞ்சயன்



சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய சம்புநாதன் சாமித்தம்பி தனது 31 வருடகால கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

நாவிதன்வெளி 15ம் கிராமத்தினை பிறப்பிடமாகக் கொண்ட இவர், விவேகானந்தா மகாவித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியினையும் துறைநீலாவணை மகாவித்தியாலயத்தில் இடைநிலை கல்வியையும் சாதாரண தரத்தினை கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையிலும் உயர்தரத்தினை பற்றிமா உயர்தர பாடசாலையிலும் கற்றுத் தேறினார்.

விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் 1990 முதல் ஆங்கில ஆசிரியராக முதல் நியமனம் பெற்று 2009 வரை கடமையாற்றினார். 2009 தொடக்கம் 2014 வரை அன்னமலை மகாவித்தியாலயத்தில் பகுதித் தலைவராகவும் பிரதி அதிபராகவும், 2014 இல் இருந்து 2021 வரை மீளவும் விவேகானந்தா மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர், கிராம மட்ட அமைப்புகளிலிருந்து பல்வேறு சமய, சமூக சேவைகளை ஆற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்பு தொடர்பாக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை 20 க்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்களின் நிலைப்பாடு என்ன?

(ஹஸ்பர் ஏ. ஹலீம்)

நோன்பு தொடர்பாக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை தொடர்பாக 20 க்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்களின் நிலைப்பாடு என்ன என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த சுற்றறிக்கையில் 18 வயதுக்கு மேற்பட்டோர் மட்டுமே பள்ளிவாயல்களுக்கு செல்ல முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வயதுக் கட்டுப்பாடு எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது என்ற கேள்வி எழுகின்றது.

பஸ்வண்டிகளில், புகையிரதத்தில் பயணிப்போருக்கு வயதுக்கட்டுப்பாடு இல்லை. ஏனைய சமயத்தலங்களுக்கு செல்வோருக்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை. பாடசாலைகள் அனைத்தும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அங்கு கல்வி கற்போர் மிகப்பெரும்பாலோர் 18 வயதுக்கு குறைந்தவர்கள்.

நிலைமை இவ்வாறிருக்க பள்ளிவாயல்களுக்க 18 வயதுக்கு மேற்பட்டோர் மட்டும் செல்ல முடியும் என்ற வரையறை எந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இது இலங்கை அரசியல் அமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்ட சமய ரீதியான அடிப்படை உரிமையை மீறுகின்றது.

பள்ளிவாயல்களினால் தான் கொரோனா பரவுகின்றது என்ற ஒரு மாயையை ஏற்படுத்த இதன் மூலம் முயற்சி எடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. இது முஸ்லிம் சமுகம் பற்றிய மோசமான ஒரு மனப்பதிவை ஏனையோருக்கு ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகும்.

இது குறித்து 20வது திருத்த சட்ட மூலத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்களின் நிலைப்பாடு என்ன என்பதை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

ஒருங்கிணைப்புத் தலைவர் பதவி, ஒருசில வேலைவாய்ப்புகள், வேறு சில தனிப்பட்ட நன்மைகள் என்பவற்றுக்காக தொடர்ந்து முஸ்லிம் சமுகத்தின் உரிமைகளை பறிகொடுத்து வரலாற்றில் இடம் பிடிக்கப்போகின்றீர்களா அல்லது முஸ்லிம் சமுகத்தின் உரிமைக்காக குரல் கொடுக்கப் போகின்றீர்களா என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

எனவே, 20 க்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்கள் தற்போது அரசாங்கத்தின் பக்கம் உள்ளதால் இந்த விடயங்கள் குறித்து அரசாங்கத்துடன் பேச வேண்டும். முஸ்லிம்கள் உரிமைகள் தொடர்பான விடங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை மீனவர்களுக்கு அனுமதி வழங்காத போது எவ்வாறு இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்க முடியும்?

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



இலங்கையில் உள்ள மீனவர்களுக்கு அனுமதி வழங்காத சந்தர்ப்பத்தில் எவ்வாறு இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்க முடியும் என திருகோணமலை மாவட்ட கிண்ணியா பிரதேச செயலக மீனவர் சங்கங்களின் சமாஜத் தலைவர் ஏ.ஆர். பாயிஸ் தெரிவித்தார்.

கிண்ணியாவில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கும் போது;

மீனவர்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிப்பவர்கள். நாட்டில் வாழும் மீனவர்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டுள்ளது. அநீதி இழைக்கப்படுகின்ற போது உரிய அமைச்சருக்கு தொலைபேசி அழைப்பு விடுக்கின்ற போது அவர் பேசுவதும் இல்லை நேரம் தருவதும் இல்லை.

ஆகவே டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிப்பதற்கு வடக்குத் திசையில் மீன்பிடிப்பதற்கு அனுதி வழங்குவதாக ஊடகங்களின் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது. இது எவ்வாறு நியாயமாகும். இது நியாயமற்ற செயலாகும்.

இலங்கையில் உள்ள மீனவர்களுக்கு அனுமதி வழங்காத சந்தர்ப்பத்தில் எவ்வாறு இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்க முடியும் இது நியாயமற்ற செயலாகும்.

இலங்கை உள்ள அனைத்து மீனவர்களும் கஸ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் கவலைப் பட்டுக் கொண்டிருக் கிறார்கள். இந்த விடயத்தல் ஜனாதிபதி, பிரதமர் அமைச்சர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

டக்ளஸ் தேவானாந்தா மீன்பிடி அமைச்சராக எவ்வாறு வந்தார் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று மீன்பிடி அமைச்சராக வந்தார். எவ்வாறு இவர் இந்திய மீனவர்களுக்கு இலங்கையில் மீன் பிடிக்க அனுமதி வழங்க முடியும் இலங்கையில் உள்ள மீனவர்களுக்கு முழுமையாக எதையும் செய்ய முடியாத காரணத்தில் எமது 21 மீன் படிப் படகுகள் கடற்படையினரால் பறிக்கப்பட்டுள்ளது.

கேட்டால் அனுமதிக்கப்படாத பகுதியில் மீன் பிடியில் ஈடுபட்டதாகக் கூறுகிறனர். இவ்வாறு இருக்கும் போது எவ்வாறு இந்தியாவுக்கு மீன்பிடிக்க எவ்வாறு அனுமதி வழங்க முடியும்.

டக்ளஸ் தேவானந்த அமைச்சர் அவர்கள் நாங்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்றார்.

# முல்லையில் நடைபெற்ற சக்கரநாற்காலி கூடைப்பந்து போட்டி







(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏ-9 வீதி மாங்குளத்தில் அமைந்துள்ள உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் அமைப்பினால் நடாத்தப்பட்ட சக்கரநாற்காலி கூடைப்பந்து போட்டி சிறப்புற இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏ-9 வீதி மாங்குளத்தில் அமைந்துள்ள உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் அமைப்பானது வடக்கு கிழக்கில் உள்ள முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் அனைவரையும் உள்வாங்கி தனது சேவைகளை முன்னெடுத்துவருகிறது.

அந்தவகையில் உயிரிழை அமைப்பானது முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோரது வாழ்வாதாரம் மருத்துவம் கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் தனது சேவையை முன்னெடுத்து வருகிறது.

அவ்வாறே தமது உறுப்பினர்களின் உடல் உளஆரோக்கியத்தை மேம்படுத்தும் முகமாக அவர்களுக்கிடையில் போட்டி நிகழ்வுகளையும் நடாத்தி வருகிறது அந்தவகையில் இவ்வாண்டுக்கான போட்டிநிகழ்வுகளை ரொட்றி கழகத்தின் அனுசரணையில் ஆரம்பித்திருக்கிறது

இந்த போட்டிநிகழ்வுகளில் முதல் நிகழ்வாக சக்கரநாட்காலி கூடைப்பந்து போட்டி இடம்பெற்றுள்ளது தமது உறுப்பினர்களை அணிகளாக பிரித்து அவர்களுக்கிடையில் குறித்த போட்டி இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

உயிரிழை அமைப்பின் தலைவர் ஸ்ரீகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த சக்கரநாட்காலி கூடைப்பந்து போட்டியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் கிளிநொச்சி ரொட்றி கழகத்தின் உறுப்பினர்கள் உயிரிழை அமைப்பின் அங்கத்தவர்கள் சமூக ஆர்வலர்களென பலரும் கலந்துகொண்டனர்.

# கரப்பந்தாட்ட போட்டி





(பொன்ஆனந்தம்)

மூதூர் சந்தோஷபுரம் ஒலி ஒளி விளையாட்டு கழகத்தின் மின்னொளியிலான கரப்பந்தாட்ட போட்டி சனிக்கிழமை இரவு வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பசுமைவனம் அனுசரணை வழங்கியதுடன் ஆரம்ப நிகழ்வில் அகாலமரணமாகிய Green kalam அமைப்பின் செயற்பாட்டாளரும் சமூக ஆர்வலரும் பல் துறை கலைஞருமான விவேக் அவர்களை நினைவு கூரும் வகையில் விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் 200 மாமரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டது. ஆரம்ப நிகழ்வில் பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# விசேட தேவையுடைய மாணவனுக்கு தட்டச்சு இயந்திரம் வழங்கி வைப்பு



கபிலர் சமுதாய மேம்பாட்டுப் பேரவையின் ஊடாக பல்வேறு கல்வி, சுகாதார மற்றும் வாழ்வாதார செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் விசேட தேவையுடையவர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளில் ஒன்றாக வந்தாறுமூலை பிரதேசத்தைச் சேர்ந்த இருவிழி பார்வையுமற்ற விசேட தேவையுடையவரான கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவு 01ம் தரத்தில் கல்வி பயிலும் புஸ்பாகரன் தில்லையன் எனும் பல்கலைக்கழக மாணவனுக்கு தேவையான விழிப்புலன் அற்றவர்கள் பயன்படுத்தும் தட்டச்சு இயந்திரம் உதவியாக வழங்கி வைக்கப்பட்டது.

மேற்படி மாணவனின் கல்வி செயற்பாடுகளுக்கு மிகத் தேவையாக இருந்த Braille machine எனப்படும் விழிப்புலன் அற்றவர்கள் பயன்படுத்தும் தட்டச்சு இயந்திரமானது சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியில் அவருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

கபிலர் சமுதாய மேம்பாட்டுப் பேரவையின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் பி.துசாநந்தன் மற்றும் அமைப்பின் நிர்வாக உத்தியோகத்தர்கள் கிளோரி மற்றும் கிசாந் ஆகியோர் இதனை அம்மாணவனுக்கு வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பின் வட்டார சபைத் தேர்தலில் போட்டியிட்டவர் காலமானார்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா நகரசபைத் தேர்தலில் பைசல் நகர் வட்டாரத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்ட எம்.சி. மஹ்ருப் மாரடைப்பு காரணமாக காலமானார். ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி வட்டத் தேர்தல் போட்டியிட்டு 423 வாக்குகளைப் பெற்றார்.

ஒரு சில வாக்குகள் வித்தியாசத்தில் தனது ஆசனத்தை இழந்தார். தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கிண்ணியா நகர சபைக்கு போட்டியிட்ட ஒரேயொரு முஸ்லிம் வேட்பாளர் ஆவார்.

சமூக சேவைப் பணிகளில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் கண்டலடியூற்று காதிரிய்யா ஜும்ஆப் பள்ளிவாசலின் தலைவராகவும் கடமையாற்றி வந்தார். அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் கூபா பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# பள்ளிவாசல்களுக்கு ஜனாஸா குளிப்பாட்டும் பெட் கையளிப்பு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை ரஹ்மத் சமூக சேவை அமைப்பின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது மஸ்ஜிதுல் ஹிதாயா மற்றும் சம்மாந்துறை மஸ்ஜிதுல் பத்ஹ் பள்ளிவாசல்களுக்கு ஜனாஸாக்களை குளிப்பாட்டும் பெட்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை அமைப்பின் தலைவரும் கல்முனை மாநகர பிரதி மேயருமான ரஹ்மத் மன்சூர், குறித்த பள்ளிவாசல்களுக்கு விஜயம் செய்து, பள்ளிவாசல்களின் நிர்வாகிகளிடம் கையளித்தார்.

இதன்போது ரஹ்மத் மன்சூரின் சேவைகளுக்காக நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டதுடன் விசேட துஆப் பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டது.

வை.எம்.எம்.ஏ. பேரவையின் அனுசரனையில் இவ்வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்ற ரஹ்மத் சமூக சேவை அமைப்பு, அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலுமுள்ள பள்ளிவாசல்களுக்கு ஜனாஸாக்களை குளிப்பாட்டும் பெட்டிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியிருப்புடன் கூடிய கடையைத் துவம்சம் செய்துள்ள காட்டு யானைகள்



[ஹஸ்பர் ஏ ஹலீம்]

திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முத்துநகர் கிராமத்துக்குள் நுழைந்த காட்டு யானைகள் வீட்டுடன் கூடிய கடையை முற்றாக நாசம் செய்துள்ளது. இச்சம்பவம் கடந்த சனியன்று இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வீட்டின் பல பகுதிகள் சேதமடைந்துள்ளதுடன் கடையில் உள்ள பொருட்களும் யானையினால் சிதைக்கப் பட்டுள்ளன.

தொடர்ந்து இப்பகுதிக்குள் நுழையும் காட்டு யானைகளினால் உயிர்க்கு உத்தரவாதம் இல்லை எனக் கூறுகின்றனர்.

அத்துடன் இரவில் நடமாடுவதும் வெளியில் செல்வதும் அச்சமாக உள்ளதாகக் கூறுகின்றனர்.

யானை வேலிகளும் சீராக இல்லாததனால் தாம் பல் வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

யானையினால் ஏற்பட்ட சேதத்துக்கு சம்பந்தப் பட்ட அதிகாரிகள் இழப்பீடுகளை வழங்குமாறும் யானைகளைக் கட்டுப்படுத்தித் தருமாறும் பிரதுச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# தையற்பயிற்சி பெற்றிருந்தும் இதுவரை யாரும் உதவவில்லை!



[சகா]

எனது குடும்பத்தில் 7பேர். நான்கு பெண்களுடன் பிறந்த நான் தையற்பயிற்சியைப் பெற்றிருந்தும் பலரிடம் கோரிக்கைவிடுத்தும் இதுவரை யாரும் ஒரு தையல்இயந்திரம் வழங்கமுன்வரவில்லை. தற்போதுதான் பிரான்சில் பிறந்த கர்ணிகா என்றகுழந்தையினால் தையல்இயந்திரம் கிடைக்கப்பெற்றுள்ளது. வாழ்க்கையில் இன்றையநாளை மறக்கமுடியாது.

இவ்வாறு ஆலையடிவேம்புப்பிரதேசத்திலுள்ள மளவராயன் மீள்குடியேற்றக்கிராமத்தில் வறுமைக்கோட்டின்கீழ் பலத்தஇன்னலுக்கு மத்தியில் வாழ்ந்துவரும் எஸ்.அனுஜா என்ற பெண் கவலை கலந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் பிரபல சமுகசெயற்பாட்டாளரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலின் முயற்சியால் பிரான்ஸ்நாட்டில் 5வயதில் மறைந்த கர்ணிகா ஞாபகார்த்தமாக ஒரு தொகுதி உதவிகள் பலஇடங்களிலும் வழங்கப்பட்டுவருகின்றது.

அதன்ஓரங்கமாக ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள பின்தங்கிய மளவராயன் மீள்குடியேற்றக்கிராமத்தில் பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வறிய குடும்பம் ஒன்றிக்கு தையல் இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டன. அவ்வமயம் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தவிசாளர் கே.ஜெயசிறில் ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர்.

தையல்இயந்திரத்தைப் பெற்றுக்கொண்ட அனுஜா மேலும் கூறுகையில்:

இன்று தவிசாளர் ஜெயசிறில் ஜயா மூலமாகக்கிடைக்கப்பெற்ற இத்தையல் இயந்திரத்தை வைத்து எனது குடும்பத்தைக் காப்பாற்றுவேன். எனது சகோதரிகளை படிக்கவைப்பேன். வாழ்வாதாரத்தை உயர்த்துவேன். உண்மையில் கர்ணிகாவின் பெற்றோருக்கும் இதற்காக ஒத்துழைத்த அனைவருக்கும் இருகரம்கூப்பி நன்றிதெரிவிக்கிறேன் என்றார்.

# மண்முனை மேற்கு பிரதேசத்திற்கான முதலாவது 2021 இன் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்



மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் பிரதேசத்திற்கான ஒருங்கிணைப்புக்குழு பிரதி தலைவரும் பொது ஜன பெரமுன கட்சியின் மாவட்ட அமைப்பாளருமான பா.சந்திரகுமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமைமண்முனை மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கடந்த ஆண்டு இப்பிரதேச செயலகப்பிரிவில் மெற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக அனுமதி கிடைக்கப்பெற வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

மேலும் இப்பிரதேசத்தின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், சமுர்த்தி, சுற்றாடல், விவசாயம், குடிநீர், வனலாகா உட்பட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் ஆராயப்பட்டதுடன் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் உட்பட உதவி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், சமுர்த்தி தலைமைமை முகாமையளர், மாவட்டத்தின் சகல திணைக்களங்களின் தலைவர்களும் அதிகாரிகளும் பிரசன்னமாயிருந்தனர்.

# அக்கரைப்பற்று காதர் ஓடாவியார் வீதி மக்கள் பாவனைக்கு கையளிப்பு!




உள்ளூராட்சி அபிவிருத்தி வலுவூட்டும் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட அக்கரைப்பற்று காதர் ஒடாவியார் வீதி கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி அவர்களினால் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.

மாநகர மேற்கு வட்டார உறுப்பினர் ஏ.சீ.பதுறுதீன் மற்றும் முன்னாள் உறுப்பினர் என்.எம். நஜிமுதீன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விசேட அதிதியாக கலந்து கொண்ட அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி அவர்கள் குறித்த வீதியின் பெயர்ப்பலகையினை திரை நீக்கம் செய்து வைத்தார்.

இப்தார் ஏற்பாடுகளுடன் நடைபெற்ற இந் நிகழ்வில்அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,உலமாக்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள்,பொதுமக்கள் என மற்றும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

மக்களின் நீண்டகால கோரிக்கையின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட இவ்வீதி அபிவிருத்தியானது சிறப்பாக நிறைவடைந்தமையையிட்டு அப்பிரதேச பொதுமக்கள் கௌரவ முதல்வர் அவர்களுக்கும்,ஏனைய அதிதிகளுக்கும் விமர்சையான வரவேற்பினை வழங்கி,மானசீக நன்றிகளையும் மகிழ்ச்சியினையும் தெரிவித்துக் கொண்டனர்.

# அறநெறி பாடசாலை ஆசிரியைகளின் சித்திரை புத்தாண்டு நிகழ்வு



(பொன்ஆனந்தம்)

மூதூர் இறால் குழி கஜமுகா அறநெறி பாடசாலை மூதூர் பிரதேச இநது குருமார் சங்கமும் இறால் கஜமுகா அறநெறி பாடசாலை ஆசிரியைகளும் இணைந்து நடாத்திய பிலவ வருட சித்திரை புத்தாண்டு நிகழ்வுகள் இறால்குழியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்து குருமார் சங்கத்தின் பராபரிப்பில் உள்ள 10 அறநெறி ஆசிரியர்கள் கஜமுகா அறநெறி பாடசாலை மாணவர்கள், நாவலடி ஆதிசிவன் அறநெறி பாசாலை மாணவர்கள், இக்கிராமத்தின் ஆலய நிருவாக சபையினர் ,கிராமத்தில் சங்கங்கள் மூதூர் பொலிஸார் , இளைஞர் விளையாட்டு கழகத்தினர் சமய சமூக நலன் விரும்பிகள் மற்றும் பெற்றோரும் கலந்து கொண்டனர்.

இங்கு மாணவர்களுக்கான விளையாட்டுகள்ஆசிரியைகளுக்கான விளையாட்டுகள்,இளைஞர்களுக்கான விளையாட்டு பெண்களுக்கான விளையாட்டு என்பன நடைபெற்றதுடன், வெற்றியாளர்களுக்கான பரிசு பொருள்களும் வழங்கிவைக்கப்பட்டது.

இங்கு பேசிய தலைவர் சிவசிறி. பாஸ்கரன் குருக்கள் பிறந்திருக்கும் பிலவ வருடத்தில் சகலரும் நோய் இன்றி சகல பாக்கியங்களும் பெற்று வாழ வேண்டும் என இறைவனை பிராத்திக்கின்றேம் என தெரிவித்தார்.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org